# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered Case No. **S.C. No.1 of 2025**
Sessions

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW4(LW6)** |
| Name | : திரு. சுந்தர் |
| Father's Name | : சின்னராஜ் |
| Village | : பிக்கனஅள்ளி |
| Taluk | : பாலக்கோடு |
| Calling | : டிரைவர் |
| Age | : 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.09.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். என் அக்கா சுகன்யா. என் அக்கா சுகன்யாவிற்கு சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு பென்னாகரம் சமத்துவபுரத்தில் உள்ள முனிராஜ் மகன் அசோக்குமாருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். என் அக்காவிற்கு 3 குழந்தைகள். என் மாமா அசோக்குமார் சென்டிரிங் வேலை பார்த்து வந்தார். அவருடைய அம்மா அந்த பகுதியிலேயே கூலி வேலை செய்து வந்தார். என் அக்கா குழந்தைகளை பார்த்து கொண்டு வீட்டிலேயே இருந்தார். என் மாமா சென்டிரிங் வேலைக்காக உள்ளூரிலும்

பெங்களூரிலும் சென்று வேலை பார்த்து வந்தார். நான் என் அக்காவை பார்ப்பதற்கு பென்னாகரம் அடிக்கடி சென்று வருவேன். என் அக்கா எதிர் வீட்டில் இருக்கும் சத்தியமூர்த்திக்கும் என் மாமா அசோக்குமாருக்கும் அடிக்கடி சண்டை வரும். ஆஜர் எதிரி சத்தியமூர்த்தியை எனக்கு தெரியும். என் மாமா அசோக்குமார் என்னிடம் ஆஜர் எதிரிக்கும் என் அக்கா சுகன்யாவிற்கும் தகாத உறவு இருப்பதாக கூறுவார். இது சம்மந்தமாக பல நேரங்களில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. நான் ஒரு நாள் என் அக்காவை பார்ப்பதற்காக பென்னாகரம் சென்று கொண்டிருந்தபோது என் மாமாவுக்கும் எதிரிக்கும் சண்டை ஏற்பட்டது. அப்போது எதிரி என் மாமாவை பார்த்து என்றிருந்தாலும் உன்னை கொலை செய்து உன் மனைவியை நான் அழைத்து கொண்டு செல்வேன் என்று கூறினார். அப்போது நான் என் மாமாவிடம் பிரச்சனை அதோடு முடித்து கொள்ளுங்கள் நான் என் அக்காவிற்கு அறிவுரை கூறியுள்ளேன் என்று சமாதானம் செய்துவிட்டு வந்தேன். பின்னிட்டு நான் என் அக்காவிற்கு என் மாமாவிற்கும் கைப்பேசியில் தொடர்பு கொண்டு கடந்த வருடம் தீபாவளி திருவிழாவிற்கு எங்கள் வீட்டிற்கு வர சொன்னேன். அதன் பேரில் என் அக்கா சுகன்யா 30.10.2024ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு இரண்டு குழந்தைகளை அழைத்து கொண்டு எனது வீட்டிற்கு வந்தார். என் மாமா அசோக்குமார் பெங்களூரில் இருந்து நேராக மாலை சுமார் 04.00 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்தார். அடுத்த நாள் 01.11.2024ம் தேதி அன்று மாலை 07.00 மணிக்கு எங்கள் ஊரில் நடன நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சியில் நானும், என்

அம்மா, என் அக்கா, அக்கா குழந்தைகள், என் மாமா ஆகியோர்கள் இருந்தோம். பின்னிட்டு என் மாமா கைப்பேசி பேசி கொண்டு எங்கள் வீட்டு பக்கமாக போனார். நான் அரை மணி நேரம் கழித்து என் வீட்டு பக்கமாக லைட் போடுவதற்காக சென்றபோது எதிரி சத்தியமூர்த்தி அவருடைய சட்டை மற்றும் பேன்ட் பகுதியில் இரத்த கறையோடு காய்கறி கத்தியை எடுத்து கொண்டு எதிரே ஓடிவந்தார். நான் என் வீட்டிடம் போய் லைட்டை போட்டு பார்க்கும்போது என் மாமா கழுத்திலும் வயிற்றிலும் குத்தப்பட்டு வீட்டின் முன்பு கவிழ்ந்த நிலையில் விழுந்து கிடந்தார். நான் என் மாமாவை திருப்பி பார்த்தபோது இரத்த வெள்ளத்தில் இருந்த காரணத்தினால் நான் சத்தம் போட்டேன். பின்னிட்டு என் சத்தத்தை கேட்டு என் அம்மா, என் அக்கா மற்றும் ஊர்காரர்கள் ஓடி வந்தார்கள். என் மாமா விழுந்து கிடந்ததை பார்த்து என் அக்கா மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். என்னுடைய மாமா இறந்து போயிருந்தார். என் அக்காவை பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். ஊர்காரர்கள் என் மாமாவின் உடலை ஆம்புலன்ஸ் வரவழைத்து தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். தற்போது இந்த நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்திதான் ஆஜர் எதிரி கையில் பிடித்து கொண்டு போனார். அந்த கத்தி **சா.பொ.1**. அன்று இரவு சுமார் 02.30 மணியளவில் என் அக்காவை வீட்டிற்கு கூட்டி வந்தேன். அப்போது கூட என் அக்கா பேச முடியாமல் பிரம்மை பிடித்தவர் போல இருந்தார். பின்னிட்டு என் அக்காவை மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தார் கூப்பிட்டு விசாரணை செய்தார்கள். என் அக்காவால் பேச

முடியவில்லை. ஆஜர் எதிரி சத்தியமூர்த்தியுடன் வந்த ஒருவர் பென்னாகரத்தில் இருக்கும் விஜய்க்கு போன் செய்து சொன்னதின் பேரில் என் அக்காவின் மாமியார் மற்றும் அவருடைய உறவினர்கள் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்துவிட்டு மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திற்கு வந்தார்கள். என் அக்கா பேச முடியாமல் இருந்த காரணத்தினால் என் மாமாவின் அம்மா புகார் கொடுத்தார். அதன் பின்னிட்டு உடலை பிரேத பரிசோதனை செய்து ஈம சடங்கிற்காக பென்னாகரம் எடுத்து சென்றுவிட்டார்கள். பின்னிட்டு 15 நாட்கள் கழித்து பாலக்கோடு நடுவர் நீதிமன்றத்தில் வந்த சம்மனின் பேரில் நீதிமன்றத்திற்கு சென்று விசாரித்தார்கள். அங்கு நடந்ததை சொன்னேன். பாலக்கோடு நடுவர் நீதிமன்றத்தில் பதிவு செய்த வாக்குமூல ஆவணம் **அ.சா.ஆ.2**. வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள்தான். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

பாலக்கோட்டிலிருந்து ஒசூர் செல்லும் பாதையில் எங்கள் ஊரில் மைய பகுதியில் இடதுபுறமாக இருப்பதுதான் கோவில் ஆகும். அந்த இடத்தில்தான் சிறுவர்களுக்கான நடன நிகழ்ச்சிகள் அன்று இரவு நடந்தது என்று சொன்னால் சரிதான். ரோட்டிற்கு வலது புறத்தில்தான் எங்கள் வீடு உள்ளது. கோவிலில் இருந்து வீட்டிற்கு சிறிது தூரம் தள்ளி வலது புறமாக உள்ளது. வலது புறத்தில் வீட்டிற்கு செல்லும் சாலையில் சுமார் 10–15 வீடுகள் இருக்கும் என்றால்

சரிதான். அங்கு 2-3 அடிகள் தான் இடைவெளி உண்டு என்றால் சரிதான். அந்த 10-15 வீடுகள் தாண்டி மாந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் வீடானது நாங்கள் வீடு கட்டும்வரை நாங்கள் அங்கு இருந்தோம். தற்போது அங்கு இல்லை. சத்தியமூர்த்தியுடன் நான் எந்த பேச்சும் பேசவில்லை. சத்தியமூர்த்தியுடன் நான் பேசி உள்ளேன் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லி இருந்தால் தவறு. பாலக்கோடு நடுவர் நீதிமன்றத்தில் போலீசார் சொல்லி கொடுத்ததைதான் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. என் மாமா வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டில் லைட் எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் சா.பொ.1 கத்தியை நான் பார்த்தேன். அப்போது எதிரி என்ன நிறத்தில் சட்டை அணிந்திருந்தார் என்றால் இரத்த கறை இருந்ததால் நிறம் தெரியவில்லை. எதிரி சட்டை போட்டுவந்தாரா டீ ஷர்ட் போட்டுவந்தாரா என்று எனக்கு தெரியாது, எதிரி அணிந்திருந்த பேன்ட், சட்டை நிறம் தெரியாது, பேன்ட் சட்டை முழுவதுமாக இரத்தம் இருந்தது. என் மாமாக்கு குடிபழக்கம் இருந்தது. இறந்த அன்றும் அவர் குடித்திருந்தார். எனக்கும் குடி பழக்கம் உள்ளது. அன்றைய தேதியிலும் நான் குடித்திருந்தேன். இரத்த கறையுடன் சத்தியமூர்த்தியை பார்த்தபின் 20 நொடி பொழுதில் என் மாமா இறந்து கிடந்ததை பார்த்தேன். எதிரியை பிடிப்பதற்கு எந்த முயற்சியும் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையிலும், நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்திலும் எதிரியை நான் பிடிக்க முயற்சி செய்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என் அக்காவை பாலக்கோடு அரசு

மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது நான் மட்டும்தான் சென்றேன். அங்கு மருத்துவரிடம் என் பெயரை சொன்னேனா என்றால் என் அம்மாவும் உடன் வந்திருந்தார். மகேந்திரமங்கலம் காவல் நிலையம் சென்று நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. எதிரியை நான் பார்த்தாகவும் நான் சொல்லவில்லை. என் மாமாவின் அம்மா புகார் கொடுக்கும்போது நான் சென்றிருந்தேன். என் மாமாவின் அம்மா காலையில் வந்துவிட்டார். எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு வெளியில் இருந்தேன். காலை 08.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றேன். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். அப்போது நான் நடந்ததை சொன்னேன். அதன் பின்னர்தான் புகார் வாங்கினார்கள். நான் சத்தியமூர்த்தியை பார்க்கவில்லை, நான் சொல்வதுபோன்று அவரிடம் எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் தவறு. விஜய் என்பவர் எத்தனை மணிக்கு என் மாமாவின் அம்மாவிற்கு தகவல் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பொதுவாக தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் வெளியூரிலிருந்து வரும் நபர்கள் மது அருந்திவிட்டு சிறு சிறு சண்டைகள் செய்வார்கள் என்று சொன்னால் அவ்வாறு எந்த சண்டையும் விசேஷ நாட்களில் செய்வதில்லை. சம்பவ தேதியில் நானும் என் மாமாவும் மது போதையில் இருந்தோம் என்று சொன்னால் தவறு. எதிரிக்கும் என் மாமாவிற்கும் எந்த காலத்திலும் சண்டை நடக்கவில்லை என்றும் என் அக்காவிற்கும் எதிரிக்கும் எந்த உறவும் இல்லை என்றும் போலீசார் கேட்டு

கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது மாமாவை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்த பின்னர் நான் பார்க்கவில்லை. என் அக்கா தற்போது எங்கள் வீட்டில் இருக்கிறார். குழந்தைகள் தற்போது என் மாமா வீட்டில் இருக்கிறார்கள். எனது அக்காவை பார்த்து உன்னால்தான் என் மகன் இறந்தான், அதனால் குழந்தைகள் உன்னுடன் இருக்க கூடாது என்று அழைத்து சென்றுவிட்டார்கள். எதிரிக்கும் என் அக்காவிற்கும் பழக்கம் இருப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 18.09.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.09.18 17:54:44 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.